an International CBSE Finger Print School
Coimbatore

# இயல் 3 மணிமேகலை

1. சீத்தலைச் சாத்தனார் -ஆசிரியர் குறிப்பு தருக.
    - பெயர் = கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்
    - இயற்பெயர் : சாத்தன்
    - பிறந்த ஊர் = திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த சீத்தலை என்னும் ஊரில் பிறந்து மதுரையில் வாழ்ந்தவர்
    - பெயர்க்காரணம்: கூலவாணிகம் ( சுலம் -தானியம்) செய்தமையால் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் என்று அழைக்கப்பெற்றார்.
    - பாராட்டுகள் : தண்டமிழ் ஆசான், சாத்தன், நன்னூற்புலவன் என்று இளங்கோவடிகள் சாத்தனாரைப் பாராட்டியுள்ளார்.
    - சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகளும் இவரும் சமகாலத்தவர்.
    - தண்டமிழ் ஆசான், சாத்தன், நன்னூர் புலவன் என்று இளங்கோவடிகளால் பாராட்டப்பட்டவர்.

2. ஐம்பெருங்குழு, எண்பேராயம் பற்றி எழுதுக.

ஐம்பெருங்குழு

- அமைச்சர்,
- சடங்கு செய்விப்போர்,
- படைத்தலைவர்,
- தூதர்,
- சாரணர்(ஒற்றர்)

எண்பேராயம்

- கரணத்தியலவர்,
- கருமவிதிகள்,
- கனகச்சுற்றம்,
- கடைக்காப்பாளர்,
- நகரமாந்தர்,
- படைத்தலைவர்,

- யானைவீரர்.
- இவுளி மறவர் (குதிரை வீரர்)

3. இந்திரவிழாவைக் காண வந்தோர் குறித்து உம் பாடப்பகுதி வழி நீங்கள் அறிவன யாவை?

- உயர்வுடைய புகார் நகரிலே மெய்ப் பொருளை உணர்த்தும் சமயவாதிகள்
- காலத்தைக் கணக்கிட்டுச் சொல்லும் காலக் கணிதர்
- தம் தேவருடலை மறைத்து மக்கள் உருவில் வந்திருக்கும் கடவுளர்
- புகார் நகரில் ஒன்று திரண்டிருக்கும் பல மொழி பேசும் அயல் நாட்டினர்
- அரசர்க்குரிய அமைச்சர் குழுவாகிய ஐம்பெருங்குழு. எண்பேராயம் ஆகியோர் கூடியிருந்தனர்.

4. மணிமேகலை - நூல் குறிப்பு தருக.

- ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று
- கதை அடிப்படையில் சிலப்பதிகாரத்தின் தொடர்ச்சியாக இருப்பதால் இரட்டைக் காப்பியம் என்பர்.
- இந்நூல் துறவு வாழ்க்கையைக் கூறுவதால், மணிமேகலைத் துறவு என்ற பெயரும் உண்டு.
- பெண்மையை முதன்மைப் படுத்தும் புரட்சிக் காப்பியம் பௌத்த சமயச் சார்புடையது. 30காதைகள் உண்டு.
- இந்நூலின் ஆசிரியர் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்.

5. இந்திரவிழா முன்னேற்பாடுகள் குறித்து எழுதுக.

- தோரணம் கட்டிய தெருக்களிலும், குற்றமில்லாத மன்றங்களிலும் பூரணகும்பம், பொற்பாலிகை, பாவை விளக்கு மற்றும் பலவகையான மங்கலப் பொருள்களை முறையாக அழகுபடுத்துங்கள்.
- பாக்கு, வாழைமரம், பூ, வஞ்சிக்கொடி, கரும்பு நட்டு வையுங்கள்.
- வீட்டுத் திண்ணைத் தூணில் முத்து மாலைகளைத் தொங்கவிடுங்கள்.
- தெருக்களிலும் மன்றங்களிலும் பழைய மணலை மாற்றிப் புதுமணலைப் பரப்புங்கள்.
- ஊர் மன்றங்களில் நல்லன பற்றிச் சொல்லுங்கள்
- அவரவர் சமயத்திற்குரிய பொருளறிந்து விவாதிட்டுத் தீர்வு காணுங்கள்.
- பகைவரிடம் கூட கோபம் மற்றும் சண்டையிடாதீர்கள்.
- வெண்மணற் குன்று, பூஞ்சோலை, ஆற்றிடைத்துறை, தண்ணீர்த்துறைகளிலும் 28 நாள்கள் விழா நடைபெறும்.